**செப்டம்பர் – 30**

# TNPSC துளிகள்

- பேஸ்புக் நிறுவனமானது தனது சமூக தலைமைத்துவ திட்டத்தின் ஒரு பகுதியாக $1 மில்லியன் பரிசுக்காக 5 உலக தலைவர்களிடையே அதுனிகா பிரகாஷ், சேதனா மிஸ்ரா மற்றும் தமன்னா தமீஜா ஆகிய மூன்று இந்தியப் பெண்களை தேர்வு செய்துள்ளது.
- வட இந்திய மாநிலங்களான பஞ்சாப், ஹரியானா, உத்திரப் பிரதேசம், ஹிமாச்சலப் பிரதேசம் மற்றும் யூனியன் பிரதேசங்களான டெல்லி, சண்டிகர் ஆகியன எரிபொருள் விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்காக பெட்ரோலிய பொருட்களின் மீது ஒரே விதமான வரி விகிதங்களை விதிக்க ஒப்புக் கொண்டுள்ளன.
    - இது தவிர இந்த மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் மதுபானம், வாகனப் பதிவுகள் மற்றும் போக்குவரத்து அனுமதிச் சீட்டு ஆகியவற்றிற்கும் ஒரே விதமான வரியை விதிக்க ஒப்புக் கொண்டுள்ளன.
- அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள், காசநோய் அபாயங்களுக்கெதிராக போராடுவதற்காக பொது மற்றும் தனியார் துறையின் முன்னணி நிபுணர்களை உள்ளடக்கிய “USAID - India End TB” என்ற கூட்டணியை உருவாக்கியுள்ளன.
- ஆசிய வளர்ச்சி வங்கியானது (ADB – Asian Development Bank) மத்திய இந்திய மாநிலமான மத்தியப் பிரதேசத்தில் முதல் பல்திறனுடைய பூங்காவை அமைப்பதற்காக 150 மில்லியன் டாலரை கடனாக வழங்கவுள்ளது.
    - இந்த புதிய முதன்மையான உலகளாவிய திறன்பூங்கா வளாகமானது மத்தியப் பிரதேசத்தின் தலைநகரான போபால் நகரத்தில் நிறுவப்படும்.
- மத்திய அரசானது மாநில பேரிடர் மேலாண்மை நிதிக்கு (SDRF – State Disaster Responsive Force) இதுவரை அளித்து வந்த நிதியை 75%லிருந்து 90% ஆக உயர்த்தியுள்ளது. இனி SDRF க்கு மத்திய அரசின் பங்களிப்பு 90% ஆகவும் மீதமுள்ள 10% அந்தந்த மாநிலங்களின் பங்களிப்பாகவும் இருக்கும்.
- நிதி ஆயோக்கும் ஐ.நா. சபையும் இந்தியாவில் 2018-2022 என்ற காலகட்டத்திற்கான நீடித்த வளர்ச்சிக்கான கட்டமைப்பில் (Sustainabale Development Framework) கையெழுத்திட்டுள்ளன. இந்த கட்டமைப்பை செயல்படுத்துவதற்கு இந்தியாவில் ஐ.நா. சபை சார்பாக இந்தியாவின் தேசிய எதிரினை (National Counterpart) என்பது நிதி ஆயோக் ஆகும்.


# தேசியச் செய்திகள்

## இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 497வது விதி செல்லாது என்று தீர்ப்பு

- 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் 27-ம் தேதி உச்ச நீதிமன்றமானது, தகாத உறவிற்காக ஆண்களை மட்டும் தண்டிக்கின்ற, 1860 ஆம் ஆண்டின் இந்திய

தண்டனைச் சட்டத்தின் (Indian Penal Code - IPC) 497வது விதியை செல்லாது என ஒருமனதாக தீர்ப்பளித்துள்ளது.

- கேரளாவைச் சேர்ந்த ஜோசப் ஷைன் என்பவர் தாக்கல் செய்த மனுவின் மீது 5 நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்ற அமர்வினால் இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.





- நீதிபதி இந்து மல்கோத்ரா மட்டுமே இந்த அமர்வில் இடம்பெற்ற ஒரே பெண் நீதிபதியாவார்.
- உச்ச நீதிமன்றமானது குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் (Criminal Procedure Code - CrPC) பிரிவு 198(1) மற்றும் 198(2) ஆகிய இரண்டையும் செல்லாதது எனவும் கூறியிருக்கின்றது.
- குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் இந்த பிரிவுகள் கணவர்களுக்கு தங்களது மனைவிமார்கள் எந்த ஆண்களுடன் தகாத உறவில் ஈடுபடுகின்றனரோ அவர்கள் மீது புகாரளிக்க அனுமதியளிக்கும்.
- உச்ச நீதிமன்றமானது
  - தகாத உறவுச் சட்டம், வாழ்வியல் உரிமையான விதி 21 என்பதையும் சமத்துவ உரிமையான விதி 14 என்பதையும் மீறுவதாகவும்,
  - 497வது பிரிவு பெண்களின் கண்ணியத்தையும் சமத்துவத்தையும் அவமதிப்பதாகவும், திருமணத்திற்குப் பிறகு அவர்கள் தங்களது கணவர்மார்களின் சொத்து எனக் கருதுவதாகவும்,

தனது தீர்ப்பில் கூறியுள்ளது.

❖ மேலும் உச்சநீதிமன்றம், தகாத உறவானது இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 306வது விதியான தற்கொலைக்கு தூண்டுதல் என்ற குற்றத்தை ஏற்படுத்தாத வரை அதனைக் குற்றமெனக் கருத இயலாது எனத் தீர்ப்பளித்துள்ளது.

## சபரிமலை கோவில் தீர்ப்பு

❖ 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் 28-ம் தேதியன்று 5 நீதிபதிகள் அடங்கிய உச்சநீதிமன்ற அமர்வு, 4:1 என்ற விகிதத்தில், எல்லா வயதுடைய பெண்களுக்கும் தங்கள் விருப்பத்திற்கேற்றவாறு எல்லா இடங்களிலும் வழிபடுவதற்கான அவர்களது உரிமையை உறுதி செய்துள்ளது.




❖ நீதிபதி D.Y. சந்திரசூட் எந்த ஒரு சடங்குகளோ அல்லது மரபுகளோ அடிப்படை உரிமைகளோடு முரண்படும்போது அவை களையப்பட வேண்டும் என்று தனது தீர்ப்பில் கூறியுள்ளார்.

❖ இத்தீர்ப்பு 2006 ஆம் ஆண்டு லாப நோக்கற்ற அமைப்பான இந்திய இளம் வழக்கறிஞர்கள் சங்கத்தால் தாக்கல் செய்யப்பட்ட பொதுநல வழக்கின் மீதான தீர்ப்பாகும்.

❖ இத்தீர்ப்பு 1951ம் ஆண்டில் பம்பாய் மாநிலம் எதிர் (Vs) நரசு அப்பா மாலி என்ற புகழ்பெற்ற வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பிற்கு முரண்பட்டதாக உள்ளது.

❖ 10 வயது முதல் 50 வயது வரையிலான பெண்களுக்கு அனுமதி மறுக்கும் கேரள கோவில் நுழைவு அனுமதிச் சட்டத்தின் 3(B) விதியானது வழிபாட்டிற்கான இந்து சமய சுதந்திரத்தை மீறுவதாக உள்ளது.

❖ மேலும் உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் பின்வருமாறு கூறியுள்ளது.
  - பெண்களுக்கு அனுமதி மறுக்கும் இந்த விதியானது ஷரத்து 25 என்ற அரசியலமைப்பின் விதியை மீறுவதாகும். மேலும் இது தீண்டாமையின் ஒரு வடிவமாகும்.
  - பெண்களுக்கு எதிரான பாகுபாடு பெண்களின் சமத்துவம் மற்றும் கண்ணியத்திற்கு எதிரான உரிமையை மீறுவதாகும்.

- மாதவிடாய் போன்ற உடலியல் ரீதியான காரணங்களின் படி அவர்களுக்கு அனுமதி மறுத்தல் அரசியலமைப்பிற்கு விரோதமானதாகும்.
- வழிபடும் உரிமை என்பது ஆண் மற்றும் பெண் இருவருக்கும் சமமாக கிடைப்பதாகும். அது பாலின பாகுபாட்டோடு இருக்கக்கூடாது.

## எஸ்.சி/எஸ்.டி (Scheduled Caste/Scheduled Tribe) சமூகத்திற்கு பதவி உயர்வுக்கான இடஒதுக்கீட்டின் மீதான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு

- 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் 26-ம் தேதி உச்ச நீதிமன்றம், பட்டியலிடப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கான (Scheduled Caste/Scheduled Tribe) பணியிடப் பதவி உயர்விற்கான இட ஒதுக்கீட்டிற்காக மாநிலங்கள் அவர்களது பிற்படுத்தப்பட்ட நிலைமைக்கான அளவிடப்படக்கூடிய தகவல்களை சேகரிக்க வேண்டாம் என்று தீர்ப்பளித்துள்ளது.




- உச்ச நீதிமன்றம் தனது 2006ம் ஆண்டின் M. நாகராஜ் எதிர் (Vs) இந்திய அரசு என்ற வழக்கின் தீர்ப்பிற்கு எதிரான மனுக்களை 7 நீதிபதிகள் கொண்ட அமர்விற்கு மாற்றுவதற்கு மறுத்துள்ளது.
- 2006 ஆம் ஆண்டின் M. நாகராஜ் எதிர் (Vs) இந்திய அரசு என்ற வழக்கில் உச்ச நீதிமன்றமானது எஸ்.சி/எஸ்.டி சமூகத்தினருக்கான (பதவி உயர்வுக்கான காரணத்திற்காக) இடஒதுக்கீட்டை அளிப்பதில் விதிமுறைகளை வகுத்து இருந்தது.
- தற்போது உச்ச நீதிமன்றம், பிற்படுத்தப்பட்ட நிலையை உறுதி செய்வதற்கான அளவிடப்படக்கூடிய தகவல்களை சேகரிப்பது என்பதன் மீதான தனது முந்தைய தீர்ப்பை மாற்றியமைத்திருக்கின்றது.
- அவ்வழக்கின் தீர்ப்பு (2006-ம் ஆண்டு) 1992 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட இந்திரா சஹானி வழக்கின் தீர்ப்பிற்கு எதிராக உள்ளதாக கருதப்படுகின்றது.
- அவ்வழக்கில் அரசியலமைப்பின் 341 மற்றும் 342 விதிகளின் படி ஒருமுறை

எஸ்சி/எஸ்டி சமூகத்தினர் ஜனாதிபதி ஆணையில் இடம்பெற்றால் அவர்களது பிற்படுத்தப்பட்ட நிலைமையை உறுதி செய்யத் தேவையில்லை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## நிதி ஆயோக் - ஆரக்கிள் ஒப்பந்தம்

- நிதி ஆயோக், சங்கிலித் தொகுதி (Block Chain) முறையிலான பதிவேடு மற்றும் இணைய தள விவகாரங்கள் (Internet of Things) ஆகியவற்றின் மூலம் மருந்துகளின் உண்மைநேர விநியோகப் பாதையை கட்டுப்படுத்த ஆரக்கிள் (Oracle) நிறுவனத்துடன் ஒப்பந்தத் தீர்மானம் (Statement of Intent - SoI) ஒன்றில் கையெழுத்திட்டு இருக்கின்றது.
- இதன் நோக்கம் இந்தியாவில் தடை செய்யப்பட்ட மருந்துகள் பெருகி வரும் பிரச்சினையைத் தடுப்பதாகும். இம்முயற்சியில் ஸ்டிரைட்ஸ் பார்மா சயின்சஸ் (Strides Pharma Sciences) மற்றும் அப்போலோ மருத்துவமனை ஆகியோர் பங்கேற்பர்.
- சங்கிலித் தொகுதி தொழில்நுட்பமானது, மருந்துகளைத் தயாரிப்பவரின் விநியோகப் பாதையில் அம்மருந்துகளை (வரிசை எண், ஸ்கேனிங், அடையாள அட்டை,) பற்றி நிரந்தரமாகப் பதிவு செய்ய உதவும்.

## இஞ்செட்டி சீனிவாஸ் உயர்மட்டக் குழு


- மத்திய பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகத்தின் செயலாளர் இஞ்செட்டி சீனிவாஸ் என்பவரின் தலைமையில் பெருநிறுவன சமூகப் பொறுப்புடைமை-2018 (Corporate Social Responsibility - CSR) என்பது பற்றி ஆய்வு செய்வதற்காக அந்த அமைச்சகம் ஒரு குழுவை அமைத்திருக்கின்றது.
- இக்குழு ஏற்கெனவே உள்ள கட்டமைப்பை ஆய்வு செய்து பெருநிறுவன சமூகப் பொறுப்புடைமை மீதான ஒத்திசைவான கொள்கை ஒன்றை ஏற்படுத்துவதற்கான பாதையை வழிவகுக்கும்.
- நிறுவனங்கள் சட்டமானது,
    - 500 கோடி ரூபாய் நிகர மதிப்பு அல்லது 1000 கோடி ரூபாய் வருமானம் அல்லது நிகர லாபம் 5 கோடி ரூபாய் உடைய நிறுவனங்கள் குறைந்த பட்சம் தங்கள் லாபத்தில் 2 சதவிகிதத்தை பெருநிறுவன சமூகப் பொறுப்புடைமைக்காக செலவிட வேண்டும் என வற்புறுத்துகின்றது.

# சர்வதேசச் செய்திகள்

## புலிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கும் முதல் நாடாக நேபாளம்

- இயற்கைக்கான உலகளாவிய நிதி (WWF – World Wide Fund for Nature) என்ற அமைப்பின் Tx2 என்ற திட்டத்தின் படி பத்தாண்டுக் காலத்தில் புலிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கும் திட்டத்தின் கீழ் உலகின் முதல் நாடாக நேபாளம் உருவெடுத்துள்ளது.

- 2022 ஆம் ஆண்டிற்குள்ளாக உலகம் முழுவதும் உள்ள புலிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்க Tx2 என்ற திட்டம் எண்ணுகிறது.
- 2009 ஆம் ஆண்டில் இருந்த 121 புலிகள் என்ற எண்ணிக்கையில் இருந்து தற்பொழுது நேபாளத்தில் 235 காட்டுப் புலிகள் உள்ளன என மதிப்பிடப் பட்டிருக்கின்றது.




- புலிகள் பாதுகாப்பிற்காக உத்தரவாதமளிக்கப்பட்ட நிர்ணயங்கள் என்ற சான்றளிப்புத் திட்டத்தின்படி (Conservation Assured Tiger Standards - CA|TS) புலிகள் வாழ்விடப் பகுதிகளை மேலாண்மை செய்வதில் உலகத் தரத்தை அடைந்த முதல் நாடு நேபாளம் ஆகும்.
- இத்திட்டம் 2010ம் ஆண்டு ரஷ்யாவில் நடைபெற்ற செயின்ட் பீட்டர்ஸ்பெர்க் புலிகள் மாநாட்டில் இயற்கைக்கான உலகளாவிய நிதி என்ற அமைப்பால் ஆரம்பிக்கப்பட்டது.

# பொருளாதாரச் செய்திகள்

## கேரளாவின் பேரிடர் வரி கோரிக்கை

- சரக்கு மற்றும் சேவை வரி மன்றமானது (Goods and Services Tax Council – GST Council) கேரள வெள்ள சீரமைப்புப் பணிகளுக்கான பேரிடர் வரி கோரிக்கை மீது தீர்வுகள் அளிப்பதற்காக 7 நபர்கள் கொண்ட அமைச்சர் குழு ஒன்றை ஏற்படுத்த முடிவு செய்திருக்கின்றது.
- இம்முடிவு புதுதில்லியில் நடைபெற்ற GST மன்றத்தின் 30வது கூட்டத்தில் எடுக்கப்பட்டது.
- இந்தக் குழுவானது கேரளாவிடமிருந்து எழுந்த கோரிக்கையான பேரிடர்

மீதான வரி பற்றி விவாதித்தது. இந்த விதியானது கேரளாவில் ஏற்பட்ட வெள்ளத்திற்குப் பிறகு சீரமைப்புப் பணிகளுக்கான தொகையை நிவர்த்தி செய்வதற்காக கூடுதல் வருமானங்களை திரட்ட எண்ணும் ஒரு சிறப்பு வரி ஆகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## லூ மதிப்பாய்வு பிரச்சாரம்

- மத்திய வீட்டுவசதி வாரியம் மற்றும் நகர்ப்புற விவகாரத்துறை அமைச்சகமானது கூகுள் வரைபடத்தில் லூ மதிப்பாய்வு பிரச்சாரத்தை தொடங்குவதற்காக கூகுள் உடன் கூட்டிணைந்துள்ளது.
- இந்த கூட்டுப் பிரச்சாரமானது நகர்ப்புறத்திற்கான ஸ்வச் பாரத் திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- இது இந்தியா முழுவதும் பொதுக் கழிப்பறைகளை கண்டறியவும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அதை எளிமையாக்கவும் 2018 அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்கள் முழுவதும் நடைபெறும்.

# மாநிலச் செய்திகள்

## இந்திய சமையற்பயிற்சி நிறுவனம்

- துணைக் குடியரசுத் தலைவர் வெங்கய்யா நாயுடு ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள திருப்பதியில் இந்திய சமையற்பயிற்சி நிறுவனத்தை துவக்கி வைத்தார்.
- இது மத்திய சுற்றுலாத்துறை அமைச்சகத்தால் ஊக்குவிக்கப்படுகின்றது. இந்த பயிற்சி நிறுவனத்தின் கட்டிடம் தேசிய கட்டிடங்களுக்கான கட்டமைப்புக் கழகத்தால் (National Building Construction Corporation - NBCC) வடிவமைக்கப்பட்டதாகும்.
- இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் இந்திய உணவு வகைகள் பற்றிய தகவல்களை பாதுகாப்புடன் பத்திரப்படுத்தி, அவற்றைப் பரவச் செய்திடுவதற்கான நடவடிக்கைகளுக்கான ஆதரவை நிறுவனப்படுத்துவதாகும்.

# முக்கிய தினங்கள்

## உலக ரேபீஸ் தினம் - செப்டம்பர் 28

- உலகளாவிய ரேபீஸ் தினமானது, ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 28 ஆம் தேதியன்று உலகம் முழுவதிலும் வெறிநாய்க்கடி நோயைப் பற்றிய விழிப்புணர்வு மற்றும் அதன் தடுப்பு நடவடிக்கைகளைப் பற்றி ஒரு விழிப்புணர்வை உருவாக்க ஏற்படுத்தப்பட்டது.

- 2018 ஆம் ஆண்டின் இத்தினத்திற்கான கருப்பொருளானது ‘ராபீஸ் தகவலை பகிர்க. உயிரைக் காப்பாற்றுக’ (Rabies: Share the message. Save a life) என்பதாகும்.
- விலங்குகள் மற்றும் மனிதர்கள் மீதான வெறிநாய்க்கடியின் பாதிப்பு மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- இந்த நாளானது உலகளாவிய ரேபிஸ் தடுப்பு கூட்டணியின் ஒரு முயற்சியாகும். இது 2007ல் தொடங்கப்பட்டது.
- இந்த செப்டம்பர் 28 ஆனது, பிரெஞ்சு வேதியிலாளரும் நுண்ணுயிரியலாளருமான, முதன்முதலில் ரேபீஸ் தடுப்பூசியை உருவாக்கியவருமான லூயிஸ் பாஸ்டரின் இறந்த நாளின் நினைவாக குறிக்கப்பட்டுள்ளது.

- - - - - - - - - - - - - - -